திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு விவசாயிகள் மழை இல்லாத காரணத்தால் எங்கள் கோவை மாவட்டத்தில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தச் சிறு விவசாயிகள் பயிர்களுக்கென்று வாங்கிய கடனை அரசு ரத்து செய்யுமா....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கிணறு வெட்டுவதற்குக் கொடுத்த கடன். நீங்கள் கேட்கிற கடன் கூட்டுறவுத் துறையிலே வரும்.

வினா எண். 79. திரு. ஆர். சிங்காரம். மாண்புமிகு கல்வி அமைச்சர்.

79—

தமிழ் ஆய்வு அலுவலர் பணியினை வட்டார அளவில் விரிவுபடுத்துதல்.

*892—திரு. ஆர். சிங்காரம்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா:—

(அ) தற்போது தமிழக அரசால் மாவட்டந்தோறும் அறிமுகம் செய்யப்பட்டுள்ள தமிழ் ஆய்வு அலுவலர் (T.R.O.) பணியினை வட்டார அளவில் விரிவுபடுத்தி, தமிழ் ஆய்வு உதவியாளர்களை (T.R.A.) பணியமர்த்த அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இல்லை.

(ஆ) எனவே, இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய புரட்சித் தலைவி தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் தமிழை கட்டாயப் பாடமாக்க வேண்டுமென்று சொல்கின்ற இந்த நேரத்தில், மாவட்ட அளவில் தமிழைக் கட்டாயப் பாடமாக்க வேண்டுமென்று சொல்லுகிற இந்த நேரத்தில், இந்த T.R.O. பணியை வட்டார அளவில் விரிவுபடுத்தினால் அதற்கு இன்னும் ஆதாரமாக இருக்கும் என்ற காரணத்தினாலேயும்தான் இந்தக் கேள்வியை நான் கேட்டிருக்கிறேன். அதை மீண்டும் பரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழை ஆட்சிமொழியாக ஆக்கியதற்குப் பிறகு ஒவ்வொரு மாவட்டங்களிலேயும், அரசு அலுவலகங்களில் தமிழ்மொழி சரியாகப் பயன்படுத்தப்படுகிறதா, ஆங்கில வார்த்தைகளுக்கேற்ப தமிழ் வார்த்தைகள் உபயோகப்படுத்தப் படுகின்றதா என்பனவற்றையெல்லாம் அறிவதற்கும், அவர்களுக் குரிய ஆலோசனைகள் வழங்குவதற்கும் உதவி இயக்குநர்கள் தலத்தில் முன்னாலேயே இந்தப் பணி அமர்த்தப்பட்டிருந்தது. ஒரு 10 அல்லது 11 மாவட்டங்களில் அந்த உதவி இயக்குநர்கள் பதவி காலியான சூழ்நிலையில் முந்தைய அரசு அதற்குப் பதிலாக தமிழ் ஆய்வு அலுவலர்கள் என்கிற பெயரோடு இந்த நியமனம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே பல மாவட்டங்களில் உதவி இயக்குநர்களும், பல மாவட்டங்களில் இந்தத் தமிழ் ஆய்வு அலுவலர்களும் இப்போது இந்தப் பணியைச் செய்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக சென்ற ஆண்டு நியமனம் செய்யப்பட்ட இந்தத் தமிழ் ஆய்வு அலுவலர்களுடைய பணி எந்த அளவில் நடைபெற்றிருக்கிறது, அதனால் என்ன பயன் ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே அதற்குப் பிறகுதான் இதற்குமேலே இன்னும் விரிவு படுத்தப்பட வேண்டுமா, வட்டார அளவிலே இப்படி அலுவலர் கள் நியமிக்கப்பட வேண்டுமா என்பதைப் பற்றி அரசு முடிவு செய்யும்.

முற்பகல் 9-40

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை வட்டார அளவிலே விரிவுபடுத்தினால் தமிழ் வளர்ச்சிக்கு மிகவும் நலமாக இருக்கும் என்று பொதுமக்களும் நாங்களும், குறிப்பாகத் தமிழர்களும் நினைக்கிற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல் விரைந்து வட்டார அளவில் விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னாலேயே இதற்கு விடையளித்து விட்டேன். ஆய்வு முடிந்ததற்குப் பிறகு தேவையானால், எந்த அளவில் எந்தத் தகுதியில் இப்படிப்பட்ட அலுவலர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பதை எல்லாம் அரசு பரிசீலித்து இறுதியாக முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பீட்டர் அல்போன்ஸ்

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழிக்கு புதிய அந்தஸ்தைக் கொடுக்கிற வகையில் ஆங்கிலத்தில் உள்ள வார்த்தைகளுக்கு எல்லாம் தமிழில் அர்த்தம் கண்டுபிடிப்பதற்காக ஒரு ஆய்வு நடத்தவேண்டும் என்றும் அதற்காகத் துணை இயக்குநர்கள்

நியமிப்பது சம்பந்தமாக அரசு பரிசிலித்து வருகிறது என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், ஏற்கெனவே ஆங்கிலத்தில் இருக்கிற சொற்களை எல்லாம் தமிழில் மொழி பெயர்ப்பதற்கும் அதிலும் குறிப்பாக சட்டப் புத்தகங்களை மொழிபெயர்ப்பதற்கும் ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டு. அந்த கமிஷனில் 25 பேருக்கு மேல் வேலை பார்த்துக்கொண்டு எந்தவிதமான வேலையும் செய்யாமல் சம்பளம் மட்டும் வாங்கிக் கொண்டிருக்கிறார்களே, அதற்காக மத்திய அரசு கொடுக்கின்ற காகிதத்தைக் கூட அதாவது தமிழ் மொழியிலே மொழி பெயர்ப்பதற்காக To encourage Regional language என்ற அடிப்படையில் மத்திய அரசு இலவசமாக காகிதங்களை சப்ளை செய்யத் தயாராக இருந்தபோதும் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக அந்தக் காகிதங்களைக் கூட வாங்குவதற்கு சக்தி இல்லாமல் ஒரு நிறுவனம் வெறுமனே சம்பளம் மட்டும் வாங்கிக் கொண்டு இருக்கிறதே, அதற்கு அரசு என்ன செய்ய உத்தேசித்து இருக்கிறது என்பதைப் பற்றி நான் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்,

மாண்புமிகு திரு, இராம. வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி அரசு அலுவலகங்களில் நடைமுறையில் பழக்கத்தில் இருந்து வருகிற அந்த அரசு நடவடிக்கைகளுக்காக உகந்த வகையில் தமிழைப் பயன்படுத்துவது குறித்து, அதற்கு உதவி செய்கிற அலுவலர்கள் பற்றிய கேள்வி, ஆகவே மாண்புமிகு உறுப்பினர் கேட்கிற அந்த பொருள் பற்றி தனியாகக் கேள்வி கேட்டால் அந்தத் துறைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண், 80—திரு. இரா, நடேசன், திரு, கு, லாரன்ஸ், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்,

80

குடும்ப அட்டைதாரர்களுக்கு 25 கிலோ அரிசி

* 3 திரு, இரா. நடேசன் :

திரு, கு, லரான்ஸ் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) 5 நபர்களுக்கு மேல் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதத்திற்கு குறைந்தபட்சம் 25 கிலோ அரிசி வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,